# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KANNIYAKUMARI AT NAGERCOIL.

17.03.2026

O.S. No. 341/2023

P.W. 1 திரு. சொக்கலிங்கம்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (4 ஆம் பிரதிவாதி தரப்பில்) -**

இந்த சொத்து சம்பந்தமான முன் ஆதாரங்களை படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சொத்து சம்பந்தமாக வரைபடங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த வரைபடங்கள் அந்த சொத்து சம்பந்தமான முன் ஆதாரகங்ளில் சேர்க்கப்பட்டுள்ளதா என்று தெரியுமா என்றால் தெரியாது. எந்த எந்த தேதிகளில் இந்த சொத்தின் உரிமையாளரும், அவருடைய முன் உரிமையாளரும் இந்த சொத்தை வாங்கினார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும். அந்த ஆவணங்களில் நான் எதுவும் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் வாதி பெற்ற கிரயம் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். அந்த ஆவணத்தில் வரைபடம் எதுவும் உள்ளதா என்று தெரியுமா என்றால் தெரியாது.

இந்த வழக்கு சொத்து அருகில் எனக்கு ஏதாவது சொத்து உள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கு சொத்துக்கு அருகில் பல நூறு ஏக்கர் நிலம் பல்வேறு நபர்கள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் எந்த எந்த சர்வே எண்ணில் யார் யார் பெயரில் உள்ளது என்று சொல்ல முடியுமா என்றால் முடியாது. இந்த

சொத்தை நான்தான் வாதிக்கு விலைக்கு வாங்கி கொடுத்தேன் என்றால் ஆமாம். இந்த சொத்து சம்பந்தமாக வாதி விலைக்கு வாங்குவதற்கு முன்பு ஒப்பந்தம் எதுவும் செய்யப்பட்டதா என்றால் செய்யப்பட்டது. எந்த தேதியில் அவ்வாறு ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் கிரய ஆவணம் ஏற்படுவதற்கு முன்னர் ஒரிரு மாதங்களுக்கு முன்னர் ஒப்பந்தம் ஏற்பட்டது, தேதி சரியாக தெரியாது. சர்வே எண். 762/2 வில் வாதி கிரயம் பெற்றதாக சொல்லும் 70 சென்ட் போக மீதி விஸ்தீரணம் சொத்து உண்டு என்றால் ஆமாம். சர்வே எண். 762/2 சொத்து பல்வேறு உட்பிரிவுகளான விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த சொத்தும், அதை சுற்றியுள்ள சொத்தும், அரசாங்கம் நில ஆர்ஜிதம் செய்ததுபற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி கேட்டு கொண்டதற்கிணங்க அவர் சொல்லி கொடுத்ததற்கிணங்க உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் தரப்பில்) -</u>**

மேலே செய்யப்பட்ட 4 ஆம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை பிரதிவாதிகள் 1 மற்றும் 2 ஆம் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.